| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்<br>மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி. |

**ந.க.எண்.206043 /பி1/2022** **நாள் : 10.03.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– மே – 2022 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு – பெயர் பட்டியலை பதிவிறக்கம் செய்தல் (NR Downloading) – திருத்தங்கள் மேற்கொள்ளுதல் – தொடர்பாக.

**பார்வை :** அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.019373/எப்1/2021, நாள்.03.01.2022, 04.01.2022 மற்றும் 19.02.2022.

******

பார்வையில் காணும் செயல்முறைகளில் மே–2022, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர் பட்டியல் தயாரிக்கும் பொருட்டு அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களும் அவரவர் பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களின் பெயர் பட்டியலை (Nominal Roll) 04.01.2022 முதல் 19.01.2022 வரையிலான நாட்களில் பதிவேற்றம் செய்ய கால அவகாசமும், 20.01.2022 முதல் 05.02.2022 வரை கூடுதலாக கால நீட்டிப்பும் வழங்கப்பட்டது.

இதன்படி தயாரிக்கப்பட்ட மே 2022 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கான பள்ளி மாணவர்களின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர் பட்டியலை அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் **10.03.2022 அன்று பிற்பகல் முதல்** அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளமான www.dge.tn.gov.in–க்கு சென்று தங்கள் பள்ளிக்கென வழங்கப்பட்டுள்ள User Id மற்றும் Password –ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து கொள்ளவும், பெயர் பட்டியலில் திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் (பெயர், பிறந்த தேதி, தாய், தந்தை / பாதுகாவலர் பெயர், புகைப்படம்) அத்திருத்தங்களை **11.03.2022 மற்றும் 12.03.2022** ஆகிய இரு நாட்களில் மேற்கொள்ளவும் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்திடுமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2021 – 2022ஆம் கல்வி ஆண்டிற்கான பத்தாம் வகுப்பு பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் எவரேனும் (Nominal Roll) சேர்க்காமல் விடுபட்டிருப்பின் பெயர் பட்டியலில் சேர்ப்பது குறித்து பின்னர் அறிவிக்கப்படும்.

ஒம்/–
இயக்குநர்

நகல்

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.